வெளியீடு : 21 - 2010

# சிந்தனைத் தொகுப்புகள் IV

பணி. அ. இராபர்ட்
பணி. அ. றொபேட்

விலை ரூ.37/-00

# சிந்தனைத் தொகுப்புகள் IV

வாழ்க்கையில் அழகானதும் நேர்த்தியானதுமான சில விஷயங்களை நாம் வாழ்ந்து பார்க்கவும் முடியும் அறிந்துகொள்ளவும் முடியும். அதன் பின்னணியில் கடந்த 50 வருட வாழ்வில் நான் சிந்தித்த, என்னைச் சந்தித்த பலவித உள்ளங்கள் அவ்வுள்ளங்களின் உணர்ச்சி வேறுபாடுகள், அவ்வுணர்ச்சி வேறுபாடுகளிலிருந்து எழுந்த கருத்துக்கள், பேச்சுக்கள், நான் படித்த கற்ற நூல்களில் உள்ளடங்கிய கருத்துக்கள் எல்லாம் விந்தையான உலகமாகும். இவ்வாறான எனது செயல்பாடுகளின் தூண்டுதலினால் சில கருத்துக்களை என் அருமை தம்பி, தங்கைகளுடன் பகிர முனைகிறேன். இது எனது 4-வது தொகுப்பாகும்.

1. எங்கே தன்னை மறந்து, தன்னலம் இல்லாது கனிந்து கரையமுடிகிறதோ, அது இறைவனின் இருப்பிடம், வடிவம் வேறாயினும் இறை ஒன்றே. எங்கே நன்மதிப்பும், இதமும் இருக்கிறதோ அங்கே அமைதி இருக்கும். எங்கேஅமைதி உண்டோ அதுவே சந்தோஷம், எது சந்தோஷமோ அதுவே இறை உணர்வு. கனிந்த நேசிப்புள்ள இறையிடம். அது பெற்றோராகலாம், சகோதர, சகோதரியாகலாம், சிநேகித, சிநேகிதியாகலாம், அல்லது காதலன், காதலியாகலாம் .......... பாதகமில்லை.

   (திரு இருதய குருத்துவக்கல்லூரி, பூந்தமல்லி. சென்னை- 56 (1992) தமிழ் மன்றக் கூட்டத்தில் நான் ஆற்றிய உரையில்)

2. சூழ்நிலைகள் மட்டும் வாழ்க்கை ஆகிவிடுவதில்லை. சூழ்நிலையில் நாம் எவ்வாறு இருக்கிறோம் என்பதுதான் வாழ்க்கை.

3. வாழ்க்கையில் நமக்கு மகிழ்ச்சி வேண்டுமானால் சில அடிப்படை விஷயங்களில் நமக்குத்தெளிவு இருப்பது அவசியம்.

4. மனிதர் இரசனையை வளர்த்துகொள்ளாமல் வாழ்க்கையை முழுமையாக அனுபவிப்பதென்பது முடியாதகாரியம். இதை வளர்த்துக்கொள்ள தவறிவிடுபவர்கள் இருந்தும் இல்லாதவராகவே வாழ்கிறார்கள்.

5. சமுதாயக் கட்டுப்பாடுகள் தேவையாக இருக்கலாம் அந்தக்கட்டுப்பாடுகள் இரசணை உணர்ச்சிக்கு முரண்பட்டதாக இருக்கக்கூடாது.

6. இரசிக்கத் தெரிந்தவரே மகிழ்ச்சியாக இருக்கத் தெரிந்தவர். மகிழ்ச்சி என்பது விலை மதிக்கமுடியாத ஆபரணம்.

7. எந்த ஒரு மனிதரும் திருந்த முடியாதவர் என்றோ, எந்த சூழ்நிலையையும் திருத்தி அமைக்க இயலாது என்றோ ஒதுக்கக்கூடாது.

8. அறிவு ஞானத்திற்குவழி . அறிவின்றி ஞானமில்லை ஆனால் ஞானமின்றி அறிவு இருத்தல் கூடும்.

9. வாழ்க்கையை நாம் இலகுவாக எடுத்துக் கொள்வதன் மூலமும், அதனைப் புரிந்து கொள்வதினாலும், உளரீதியாக அதனை அணுகுவதின் மூலமும், சில வழிமுறைகளை கையாளுவதின் மூலமும் மன அழுத்தத்திலிருந்து விடுதலை பெறலாம்.

10. வரலாறு ஓர் ஆறு. அது வாழ்கிறது என்று சொல்ல வேண்டு மென்றால் அங்கே தண்ணீர் வழிந்தோட வேண்டும். மாறாக அது மணலாக காட்சியளித்தால் அது பாலை நிலம். அது வாழ்விற்கே கேடானது. எந்த வரலாறு தன்னுடைய இறந்த காலத்தோடு தொடர்பு அற்றுப்போகிறதோ அந்த ஆறு வற்றிப்போக ஆரம்பிக்கும் எந்த வரலாறு வருங்காலம் பற்றிய கருந்துக் காட்சி இல்லாதிருக்கிறதோ அந்த ஆறு வெகுவிரைவில் மணலாறாக மாறி விடும்.

11. எந்தக் கட்டமாயினும் அச்சூழ்நிலையில் செயற்படும் சமூக ஒழுங்கமைவால் எல்லாப்பிரச்சனைகளுக்கும் விடைகாண முடியாமல் போவது கண்கூடாகும். இதற்கு தீர்வு காண்பதற்கு உயர் உள்நோக்கமும் உயர் தளப்படுத்தலும் தேவை, இதற்குப் பதிலாக கீழ்மட்ட நோக்கில் அல்லது முற்காலப்போக்கில் செயற்பட்டால் இருக்கின்ற நிலையை சீரமைப்பதற்குப் பதிலாக சீரழிவையே உண்டாக்கும்.

(தமிழ் இறையியல் மன்றம் 1993 திருச்சியில் நடைபெற்ற வருடாந்திர கூட்டத்தில் நான் ஆற்றிய உரையில்)

12. எக்காலத்திலும் உன் உள்ளத்தில் உள்ளது. உள்ளபடி பலர் அறிய வெளிப்பட்டாலும், அதில் வெட்கப்படக்கூடியது எதுவும் இல்லாமல் வைத்துக்கொள்வாயாக.

13. எவன் பிறரிடம் முறைதவறி நடந்து கொள்கிறானோ அவன் தனக்கே கேடு விளைவித்துக் கொள்கிறான்.

14. உன்னை ஒருவர் இகழ்ந்தானென்று வைத்துக்கொள்வோம். அது அவரையே பாதிக்கும், அதன்பொருட்டு உன் செயலும் பேச்சும் இகழ்ச்சிக்கு இடமாகக்கூடாது.

15. வருங்காலத்தைப்பற்றி மனம் கலங்காதே, வருவன வரும்போது இப்போதுள்ள அறிவை அப்போதும் பயன்படுத்தி உன் கடமையை ஆற்றலாம்.

16. தன்னிடத்தில் உள்ள மாற்றமுடியாததை ஏற்றுக்கொள்ளவும், மாற்றக்கூடியதை மாற்றியமைக்கவும் தெளிவு பெற்றுவிட்டால் தாழ்வு மனப்பான்மை அந்த நபரை விட்டு அகல ஆரம்பித்து விட்டது என்பது உறுதி.

17. பெண்ணுக்கு ஆணே வாழ்க்கை, ஆணே உலகம் என்றும் ஆகிவிடக்கூடாது. அவளை வாழவைப்பது ஆணாகி விடக்கூடாது அவளின் சுயதகுதிகள் வரம்புகள், மற்றும் குறைபாடுகளே அவளை வாழவைக்கவேண்டும்.

18. இளம் பருவத்துப் பிள்ளைகளுக்கு ஒவ்வொருவருக்கும் உரிய சுய தகுதிகள் உண்டு. அந்தந் தகுதிகளுக்கு வரம்புகள் உண்டு. அறிவாற்றல் உண்டு அதற்கும் வரம்புகள் உண்டு. திறன்கள் உண்டு, அவற்றுக்கும் வரம்புகள் உண்டு. ஆனால் பெற்றோர்கள் தகுதிக்கு மீறிய எதிர்பார்ப்பை பிள்ளைகள் மீது திணிக்கிறார்கள். அன்பு பாராட்டுவதற்கும் நிபந்தனை விதிக்கிறார்கள். தோல்வியுற நேர்ந்தால் ஏற்க மறுக்கின்றார்கள்.

19. சமூகத்தில் நான் பயனற்றவர் என எவர் எண்ணம் கொள்கிறாரோ அவர்தான் நாளைய சமூக விரோதி.

20. தாயைக்குறித்து வெட்கப்படுகிறவர் மிக மோசமான தாழ்வு மனநோயாளி.

21. உங்கள் இலக்கை தேர்ந்தெடுங்கள். உங்கள் பெற்றோர் உங்களுக்காக அர்ப்பணிப்புடன் செயல்புரியலாம். ஆனால் உங்கள் இலக்கை அவர்கள் தேர்ந்தெடுக்க முடியாது.

22. வெறும் பேச்சு, வெட்டிப் பேச்சு, கேலிப் பேச்சு, பேசும் தனி நபர்கள் கொண்ட சமுதாயம் எதையும் சாதிக்காது,

23. நாம் நமக்கே தலைவனாயிருக்கவும், மற்றவர்களின் தனித்தன்மையை மதிக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

24. இருவருடைய உள்ளமும், கருத்தும் ஒன்றுபட்டிருக்கும்போது, ஒருவருடைய இன்பமும் சிறப்பாக, துன்பமும் மற்றவரைப் பாதிக்கும்.

25. நிபந்தனைகளுக்கு உட்பட்ட அன்பு அன்பன்று, அது தாய்ப்பாலுக்கு, விலை பேசுவது போன்றது.

26. உன் உள்ள உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ள எனக்கு எக்ஸ்ரே கண்கள் இல்லை, நீ உன்னை வெளிப்படுத்தினாலொழிய நாம் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள முடியாது.

27. ஒவ்வொரு மனிதனது உள்ளம் தூய்மையாக்கப்பட வேண்டும். அவரது சிந்தனை, சொல், செயல் அனைத்தும் நேர்மையாகவும், நீதியானவையாகவும், கனிவும் அன்பும் கலந்ததாகஇருக்கவேண்டும். ஒருவர் தன்னையே புரிந்துணர்வு என்னும் பண்பை வளர்த்து தன்னையே முதலில் ஏற்று, தன்னுடன் சேர்த்து எல்லோரையும் புரிந்து ஏற்றுக்கொண்டு வாழும்பொழுது தன் உடன் பிறப்புப் போலவோ அன்றேல் தன்னைப்போலவே நினைத்துப் பழகுவர்.

28. தன் உண்மை நிலையைத் தேடி அலையும் உணர்வு உண்மையிலே இறை அனுபவம் ஆகும்

29. சுய ஏற்பு இல்லாதவர்களிடம் தீயமனம் வஞ்சகம் உருவகலாம் வஞ்சகம் என்று சொல்லும் போது பிறரை ஏமாற்றுவது, ஏமாற்றும் வகையில் நடந்து கொள்வது யாராக இருக்கிறோமோ, யாராக இல்லையோ அப்படி இருப்பதாகவும், அதை வெளிக்காட்டாமலும் இருக்க முயற்சிப்பதாகும், குறிப்பாக பிறர்மேல் குற்றம் காண்பது முக்கிய இடம் பெறும்.

(பெண்களின் விடுதலை நற்செய்தி 1992)

30. தாழ்வு மனம் குடிகொண்டிருப்பவர் அதன் வெளிப்பாடாக பிறரை அடக்கியாளும் நிலை இருப்பதை காணலாம். இவர்கள் காட்டும் வழியில் செல்லாதவர்களை தீயவர்களாக கருதுவார்கள். மனதில் சிக்கல் ஏற்பட்டவுடன் அதைசரிசெய்ய மனதில் ஏற்படும் தற்காப்பு பொறியில், தன்னையே அன்பு செய்யாத ஒருவன் சட்டதிட்டங்களை நுணுக்கமாக கடைப்பிடிப்பான். சட்டம் அவனுக்கு பாதுகாப்புகொடுப்பதாக உணருகிறான்

(பெண்களின் விடுதலை நற்செய்தி 1992)

31. மூதாதையோர் வழியாக பெற்ற சில சமுதாய மூடக்கருத்துக்களை நாம் ஊக்குவிப்பின் அதன் விளைவுகள் பிழையானதாகவே இருக்கும், மாறாக நாம் சிந்தித்து நல்ல கருத்துள்ள மனித இயல்பை ஊக்குவிப்பின் விளைவுகள் பயன் உள்ளதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை, மனிதனை மனிதன் ஆக்குவதும் மனிதனை தெய்வம் ஆக்குவதும் உறவின் விளைவுகள் என்றால் மிகையாகாது.

(சிந்தனை அலைகள் 1990)

32. ஆரோக்கியமான ஆண், பெண் நட்புறவை ஊக்குவித்தால் தூய்மையான சந்தோஷத்தை உடல் சார்ந்த, உளவியல்பு சார்ந்த, ஆன்ம வியல்பு சார்ந்த முறையில் நாம் பெற முடியும்.

(சிந்தனை அலைகள் 1994)

33. ஆணும் பெண்ணும் பொது இடத்தில் உரையாடிக் கொண்டிருக்கின்றனர். உடனே நம்மில் தீய எண்ணங்களே துளிர்விட்டா, நாம் பெண்களிடம் அல்லது ஆண்களிடம் (அதே வயதில்) தவறாக பழகியுள்ளோம் என்பதே உண்மை, நமது குற்றமே அடுத்தவரையும் குற்றவாளியாக்குகிறது, நல்லவர்களையும் தீயவர்களாக்குகிறோம்

(மனித விழித்தெழு 1995)

34. மனிதனின் இளமைப் பருவத்தில் எழுகின்ற உணர்வுகள் உரிமை பெறுகின்ற வாய்ப்பானது, அவர் வாழ்கின்ற சூழலில் தங்கியுள்ளது.

(மனித நடத்தைக் கோலங்கள் 1987)

35. திருமணத்தின் இணைப்பு பாலமாக அமைவது உணர்வு, இவ்வுணர்வு நிலையில் ஒருவரையொருவர் புரிந்துணர்வு கொள்ளாவிட்டால், சட்டம் தந்த உரிமையோ, அதனால் வந்த உறவோ செயலற்றுவிடுகிறது,

(மனித நடத்தைக் கோலங்கள் 1987)

36. ஒருவர் இல்லறத்தில் இருக்கிறாரா, துறவறத்தில் இருக்கிறாரா, திருமணம் செய்யாமல் இருக்கிறாரா என்பது முக்கியமல்ல, அவர் தேர்ந்து கொண்ட வாழ்க்கை பழிச்சொல்லுக்கு உள்ளாகாமல் நிறைவாக வாழ்வதே அவருக்குப் பெருமையையும், சிறப்பையும் தேடித்தரும். அதாவது தனது உள்ளார்ந்த செயல்பாட்டில் வாழ்க்கை நடத்தும்போது இன்பம் அடைகிறார்கள்.

(பசுமையான உறவுகள் 1996)

37. ஒரு பெண்ணை அல்லது ஒருவனை ஒரு குறிப்பிட்ட இயல்பு சார்பாக கூறுவது தவறாகும். தன் மதிப்பே ஆளுமையின் அளவுகோல், மனிதர் தன்னை எவ்வாறு மதிக்கிறாரோ அதே அளவில்தான் பிறரையும் மதிக்கிறார்.

(சிந்தனை அலைகள் 1990)

38. வாழ்விற்கு நீர், காற்று, ஒளி முதலியன இன்றியமையாது விளங்குவதைப் போல் பெண்ணிற்கு ஆணும், ஆணிற்குப் பெண்ணும் இன்றியமையாதவர். ஆண் பெண்ணையும் பெண் ஆணையும் ஒதுக்குதல் குற்றமாகும். இதனால் நாளடைவில் வாழ்க்கையில் பலவித நோய்களை தோற்றுவிக்க வருந்தும்.

39. தன் சிந்தனைகளின் விளைபொருளோ ஒருவன், அவனது நினைவுகள் எப்படியோ அவன் ஆவதும் அப்படியே.

40. ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தமது வாழ்வில் அன்பில் (காதலில்) ஈடுபடுவார்கள். இதனால் இவர்கள் வாழ்க்கையை சுபிட்சமாக நடத்துவார்கள். மாறாக அன்பில் (காதலில்) ஈடுபடாதவர்கள் தமது வாழ்வில் பிரச்சனைகளை எதிர்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

41. ஒவ்வோர் பிரச்சனைகளுக்கும் நிச்சயம் ஓர் ஆணிவேர் இருக்கும். அமைதியாய் இருந்து ஆழமாய்ச் சிந்தித்தாலொழிய அதனைக் கண்டுபிடிப்பதென்பது கறுப்புப் பூனையை இருட்டுக்குள் தேடுகின்ற கதையாகப்போகும்.

42. பிரச்சனைகள் நம்மை புண்படுத்துவதில்லை. பிரச்சனைக்கு நாம் கொடுக்கும் விளக்கம்தான் நமது மனதைப் புண்படுத்துகிறது.

43. சில சமயங்களில் நமது முடிவு எதிர்ப்பைக் கிளப்பும். அப்போது நாம் விட்டுக்கொடுப்பதா, சமரசம் செய்துகொள்வதா, பிடிவாதம் பிடிப்பதா என்று தீர்மானிக்க புத்திக்கூர்மை தேவைப்படும். ஆனால் ஒருமுறை தவறானது, நடைமுறைக்கு ஒவ்வாதது என்று தெரிந்த பிறகும், திடமானது என்ற பெயரால் அதையே வலியுறுத்துவது அறிவீனம் ஆகும்.

(சிந்தனை தொகுப்புகள் 1994)

44. அநியாயங்கள் நடக்கும்போது அதை எதிர்த்து நின்று சாதுரியமான வகையில் கோபத்தை வெளிப்படுத்தி நியாயமான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கு நமக்கு கடமை உண்டு.

45. சில வேளைகளில் குறைவான உண்மைகள் அதிகமான அநியாயங்கள் பின்னிப்பிணைந்து பொருத்தமாகத் தெரிவது மனோத்துவ கொடுமையாகும், அதை எதிர்த்து நிற்பது நமது கடமை ஆகும்,

46. பிரச்சனையிலிருந்து தப்பிப்பதர்காக பயங்கரமான கொடிய பழக்க வழக்கங்களை நியாயப்படுத்துவது மனோதத்துவ கொடுமையாகும், அதன் அடிப்படையில் எழும் ஒற்றுமை என்னும் மாயையை எதிர்ப்பது நமது உரிமை

47. நாம் மற்றவர்களுக்கு ஆறுதல் தறுவது மற்றவர்களோடு 100% ஒத்துப்போவது என்பது அர்த்தமல்ல. கண்மூடித்தமான அவர்களின் கருத்தை ஏற்றுக்கொள்ளவும் தேவையில்லை. நாம் சரிவர உணர்ந்து கொள்ளும் கருத்துக்களில் நிலைநிற்பது நமது உரிமை ஆகும்,

48. மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை புதியவைகள், சீர்திருத்தங்கள் வரும்போது ஏற்றுக் கொள்வது சற்றுக் கடினமாக தோன்றலாம் பரபரப்பை ஏற்படுத்தலாம் தற்காலிக தடைகளோ பிரச்சனைகளோ ஏற்படும் என்பதற்காக புதுப்பித்தல் தேவையில்லை என்று எவரும் சொல்வாரிலர் புதுப்பித்தலுக்கு விழிப்புணர்வுதேவை,

49. சமூக மாற்றம் இன்றைய காலத்தின் நிர்ப்பந்தங்கள்!
சமூக மாற்றம் நாம் விரும்பினால் நடக்கும்!
சமூக மாற்றம் நம்மால்தான் முடியும்!

50. யாருமே எவரையும் சுதந்திரமாயிருக்க வற்புறுத்த முடியாது. விடுதலை பெற கட்டாயப்படுத்த இயலாது. மனிதர்கள் சுதந்திரமாயிருக்க இயலும் வண்ணம் பொருத்தமான ஒரு சூழமையை உருவாக்கிக் கொடுக்க மட்டுமே மனிதசக்தியால் இயலும்.

51. ஒரு சொல்லாக இருந்தாலும் அல்லது சம்பவமாக இருந்தாலும் நாமாக அனுமதித்தால்தான் அது நம்மை பாதிக்க முடியும். நாம் அனுமதிக்க வில்லையானால் அதுவும் நம்மை பாதிக்காது.

52. ஒரு சமூகத்தில் தனிமனித சுதந்திரம் இருந்தால் மட்டுமே ஒருவர் பூரணமாகவும், வலிந்தும் தன்னை முற்றாக அர்ப்பணிப்பர், அச்சுதந்திரம் பாதிக்கப்பட்டால் அவர் இயந்திரம் போல் ஆகிவிடுவார். என்பதில் ஐயமில்லை. அன்பின் அடிப்படையிலான அதிகாரம் அதிகம் பயன்தரக்கூடியதும் நிரந்தரமானதாகும்.

53. வாழ்க்கையே, வாடிக்கையாகிப் போனதால் உணர்ச்சிகளோடு கூடிய மாற்றங்களுக்கும், மாற்றங்கள் கூடிய நிகழ்ச்சிகளுக்கும் மக்கள் ஈர்க்கப்படுவது இயல்பே.

54. நாம் நம்மையே கேட்கவேண்டிய கேள்வி யாதெனில் என்வாழ்வு எடுத்துரைப்பது என்ன? இறைவனது தூய்மை என் முகத்தில் மிளிர்கிறதா? நாம் இறைவனால் படைக்கப்பட்ட உலகில் வாழ்கின்றோமா? அல்லது நாமே நமக்கென்று படைத்துக்கொண்ட தனித்த ஓர் உலகில் வாழ்கின்றோமா?

(சிந்தனை தொகுப்பு 1994)

55. தனிமையை நாம் நன்மை காணும் மனப்பான்மையுடன் அதில் நிறைவு காணும் கண்ணோட்டத்தில் நோக்கினால் தனிமை நம் ஆளுமையை வளர்ப்பதற்கும், அதில் இன்பம் காண்பதற்கும் துணை செய்கிறதென்பது புலனாகின்றது.

(ஆண் பெண் விழிப்புணர்வு 1991)

56. ஒருவர் தன்னை அன்பு செய்யாதபோது தனிமைப்படுத்தப்படுகிறார் தனிய இருப்பது தனிமையல்ல, மக்களோடு இருக்கும் போது தனிமையை உணர்வார்.

57. தனித்தன்மை என்பது (மனம்) ஒழுக்கம், மனவலிமை உயர்ந்த பண்பாடுகள், (உடல்) ஆடை, தோற்றம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

58. ஒருவர் அணியும் உடை அவருடைய குணத்தின் வெளிப்பாடாக அமைகிறது என்பது முற்றிலும் உண்மை, எனவே ஒருவர் அணியும் உடை அவருடைய எண்ணங்களின் பிரதிபலிப்பாக இருப்பது தவிர்க்க முடியாது,

59. ஆபாசம் பெண்கள் ஆடை அணியும் முறையில் இல்லை. பார்ப்பவர்களின் உள்ளத்திலும், கண்களிலும் தான் உள்ளது. இந்த உண்மையை ஏற்றுக்கொள்ளாத ஆணாதிக்க சமுதாயம் பாரம்பரியம் என்கிறார்கள். எந்த ஆடை அணிவது தங்களுக்கு தகுதியாகவும், பொருத்தமாகவும், அழகாகவும் உள்ளது என்பதை ஆடை அணியும் பெண்களே தீர்மாணிக்க வேண்டும்.

(சிந்தனைச் தொகுப்புகள் 1997)

60. ஒருவர் படிக்க படிக்க அறிவு பெருகுகிறது ஆனால் சிந்திக்க சிந்திக்கத்தான் அது தெளிவுபடுகிறது. கடவுளை மனிதர் எவ்வகையில் உருவகித்து கொள்ளுகிறாரோ அவ்வகையில்தான் அவர் தன்னையே உருவாக்கிகொள்கிறார்.

61. ஒருவர் தன்னிடமுள்ள தன்னிகரற்ற ஆற்றலைக் கொண்டு தன்னில் உறைந்திருக்கும் இறைத்தன்மையைக் கொண்டு தடைகளை அகற்றி, நிறைகளைக்காண வாழ்ந்து, அந்த நிறைவைக் கண்ட மகிழ்ச்சியிலே படைப்பனைத்தும் பயன்பெற்றால் அதுவே இலட்சியம் ஆகும்.

62. தூண்டத் தூண்ட அதிகமான ஒளி கொடுக்கும் அகல் விளக்கைப் போல், தோண்டத் தோண்ட அதிகமாக சுரக்கும் நீர்ச்சுரனைப் போல் இந்த சமுதாயக்கடலில் நீந்த நீந்த அதன் ஆழத்தையும் அற்புதத்தையும் முரண்பாட்டினையும் நாம் ஒருவாறு புரிந்துகொள்ள முடியும்.

63. கருவறை நாடகத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் கவனிக்கும்போது அங்கே நடைபெறும் திட்டமிட்ட சீரான செயல் முறைகளை உணரும்போது இறைவனது எண்ணற்ற நல்லருள் கொடைப்பலனை எண்ணி வியப்படையாமல் இருக்க முடியாது.

64. இறைவனின் படைப்பு எல்லாம் இன்பத்தில் இருப்பிடமாகத்தான் இருக்கிறது. இன்பத்தை புரிந்து கொள்வதிலே இன்பத்தை உணர்வதிலே, இன்பத்தை அனுபவிப்பதிலே ஒரு பக்குவநிலையை அடையாவிடத்து, தான் துன்பம் துயரம் என்று பிரச்சனைகள் உருவாகின்றன.

(சிந்தனை அலைகள் 1990)

65. பசி, தாகம், பாலுணர்வு போன்றவை இயற்கையான இயல்பூக்கங்கள் இவை எல்லா மனிதருக்கும் இருக்கும், இருக்கவேண்டும். இவற்றைக் கையாளுவதில்தான் தவறு இருக்கிறதே தவிர, இந்த இயல்பான உணர்வுகள் தன்னிலே தவறானவை அல்ல.

66. பாலியல் என்பது சிப்பிக்குள் மறைந்து கிடக்கும் முத்துப்போன்றது. இறைவனின் கொடை புனிதமானது. கடவுளின் பிரதிபலிப்பை தன்னுள் கொண்டுள்ளது. இதில் இழிநிலைக்கு இட்டு செல்ல எதுவுமே இல்லை.

(சிப்பிக்குள் முத்து 1995)

67. சாதாரணமாக ஓர் ஆண் ஒரு பெண்ணைப் பார்த்ததும் ஈர்க்கப்படுவதற்கு பலகாரணமிருக்கு, அறிவியல் பூர்வமாக அது நியாயம்தான், இறைவன் படைப்பிலேயே ஓர் ஆண் பெண்ணால் ஈர்க்கப்படுவதும், பெண் ஆணால் ஈர்க்கப்படுவதும் நியாயமானதுதான்.

68. மனிதன் உயிர்வாழ வயிற்றுப்பசி, அதேபோல் பல்கிப் பெருக உடற்பசி. இவை அனைத்து உயிரினங்களுக்குமே பொதுவிதி. உடற்பசி மனிதன் தனக்குத் தானே செயற்கையாக தோற்றுவித்த அறிவியல் கண்டுபிடிப்பு அல்ல. மாறாக இறைவன் மனிதர்களுக்கு தந்த இயல்பான இயற்கையின் கொடை ஆகும். உடற்பசியை முறையாக கொண்டால் அழகு. அதுவே இறைத்தன்மை. முறைதவறினால் ஆபாசம் அதுவே துன்பம்.

69. மனிதனையும் பாலுணர்வுகளையும் பிரிக்க இயலாது. பாலியல்பின் அழகை, அருமையை நன்கு உணர்ந்தவர்கள் மிகச்சிலரே. பாலியலைப் பழிப்பவர்கள் தங்கள் மனித இயல்பையே பழிப்பவர்கள் என்பதில் ஐயமில்லை, இவர்கள் தங்கள் உள்ளத்திலும், உறவுகளிலும், ஆன்மீகத்திலும் ஆளுமை வளர்ச்சி குன்றியவர்களே.

(மனிதா சிந்தி 1993)

70. பால் உணர்ச்சி வழிப்பட்ட அன்பும் உண்மையில் அன்புதான், அது வெறும் கவர்ச்சி என்று சொல்வதற்கில்லை. அந்தப் பாலுணர்ச்சி வழிவந்த அன்பும் தன்னடக்கம் உடையதாக இறைவனுக்கும், பலருக்கும் பயன் படக்கூடியதாக வாழச்செய்வதாக அமையும்போது மனிதத் தன்மையோடு கூடியதாகும். பாலியலை அழிப்பது கடவுள் வாழும் ஆலயத்தின் ஒரு பகுதியை இடித்துப் போடுவது போன்ற ஒரு செயலாகும். நாம் வெற்றி வாழ்க்கை வாழவேண்டுமென்பதே இறைவனின் விருப்பம். அடுப்பில் எரிகின்ற நெருப்பை அணைத்து போடவேண்டிய அவசியமில்லை. வீடு தீப்பற்றி விடாதபடி பார்த்துக் கொண்டால்போதும்.

(சிப்பிக்குள் முத்து 1995)

71. மனவுறுதியும், அறிவாற்றலும் கொண்ட எந்தப்பெண்ணையும் யாரும் எந்தவகையிலும் தீயவிளைவுக்கு ஆளாக்கிட முடியாது.

72. விழிப்புணர்ச்சி என்பது நிகழ்காலத்தைக் குறித்தும் இப்பொழுது இங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து விழிப்புடன் செயல்படுவதாகும்.

73. ஆழமற்ற ஆண் ரசனைக்குட்படும் பெண்ணின் உடல் அழகு அலங்கார ஆடம்பரப் பொருளாக மாற்றப்படுகிறது. ஆழமற்ற பெண் ரசனைக்குட்படும் ஆணின் உடல் அழகு அலங்கார ஆடம்பரப்பொருளாக மாற்றப்படுகிறது. கவர்ச்சி என்பது ஒவ்வொருவர் மனதைப் பொறுத்தது. ஆபாசம் என்பது மனதைப்பொறுத்தது. காலத்தையும் அவரவர்கள் கருத்தையும் ஒத்து மாறக்கூடியது. மனத்தின் எண்ணங்களை கட்டுப்படுத்தி அடக்குவது முக்கியமல்ல. அவற்றை உள்ளபடியே புரிந்து கொள்வதுதான் முக்கியம்.

(ஆண் பெண் விழிப்புணர்வு 1991)

74. ஒரு பெண்ணின் பாதுகாப்பில் ஒரு ஆண் இல்லாவிட்டால் அந்த ஆணின் கதி அச்சாணியற்ற தேர்போல் ஆகிவிடும். அத்தகைய பெண் தாயாக, மனைவியாக, சகோதரியாக, உற்ற சிநேகிதியாக இருக்கட்டும். அவர்கள் சம்பந்தப்பட்ட ஆண்களை அன்பு என்ற அரவணைப்புக்குள் பாசம் என்ற கைப்பிடிக்குள் வைத்திருக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை எனது அன்பு சகோதரிகள் ஒவ்வொருவரும் நன்கு உணர வேண்டுமென்பதே எனது ஆவல்.

(மனித நடத்தைக் கோலங்கள் 1983)

75. பெண்மை என்பது ஒரு வீணை என்றால் ஆண்மை என்பது அந்த வீணையினை மீட்க அற்புதமான இசையினை எழுப்பும் விரல்களாகும். ஒருவீணையில் இனிமையான இசை எழுவதற்கு ஏதாவது தடங்கல் இருக்கிறதென்றால் வீணை பழுதுபட்டிருப்பதும் ஒருகாரணமாக இருக்கலாம். வீணையை மீட்டும் விரல்கள் அல்லது விரல்களுக்கு உரிய சக்தியற்ற நிலையாக இருக்காலம் அல்லது இரண்டுமே பழுதுபட்டிருக்கலாம்.

(பருவகால நடத்தைகள் 1989)

76. சமுதாயத்தில் ஆணின் நிழல்போல் நடமாடுவதுதான் பெண்ணுக்கு அழகு என்றும் ஆண் ஆதிக்க சமுதாயம் வாதாடுகிறது. யாரும் யாருடைய நிழல் அல்ல. நீதியுள்ள சமுதாயம் உதயம் ஆவதற்கு ஆண், பெண் போட்டியும் அல்ல., ஆண், பெண் ஒருங்கிணைந்த முயற்சியினால்தான் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கமுடியும்.

(ஆண், பெண் விழிப்புணர்வு1991)

77. பெண் விடுதலை ஒரு நீண்ட பயணம். பல நூற்றாண்டுகளாகவும், பலநாட்டு பழக்கங்களாலும், ஏன் மத வழக்கங்களாலும் நீதிப் படுத்தப்பட்டு பலப்படுத்தப்பட்ட ஓர் அடிமைத்தனத்தை திடீரெனப் போக்குவது முடியாது. நமது சமய, சமூக, அரசியல் பொருளாதாரத்தில் தங்கியுள்ளது. இவை அனைத்தும் கூட்டு முயற்சியில் செயல்படுத்தப்பட வேண்டியுது.

(பெண்கள் தினம் 1992, சென்னை 16-ல் நான் ஆற்றிய உரையில்)

78. பால் உணர்வு பற்றி ஒருவர் எத்தகைய எண்ணங்கள் கொண்டிருக்கிறார் என்பது அவ்வெண்ணங்களில் அவருக்கு எவ்வளவு உறுதிப்பாடு உண்டு என்பதைப் பொறுத்தே. அவருடைய இளமைக்கால வாழ்விலும், திருமண வாழ்விலும், திருமணம் முடியாத வாழ்விலும் பால் உணர்வுக்கு மதிப்போ அவமதிப்போ நேரிடும்.

(சிந்தனைத் துளிகள் 1989)

79. பெண்ணடிமைத்தனத்திற்கு அடிப்படையான ஆணிவேராக பெரும்பாலான ஆண்கள்-பெண்கள் இரு சாராருமே தங்களது உள்ளியல்பு அல்லது உண்மையான ஆளுமையினது இன்றியமையாத ஒரு பகுதியான பெண்மையையே மறுத்து வாழ்கிறார்கள்.

80. தன்னம்பிக்கையற்ற ஓர் மனிதர்தான் தனது மாதிரியாக ஒருசிலரைத் தூக்கி வைத்துக்கொள்ளவார்கள்.

(சிந்தனை தொகுப்புகள் 1997)

81. திருமண உறவில் கணவனும் மனைவியும் தங்கள் தனித்தன்மைகளை இழந்து விடுவதில்லை. இழந்துவிடவும்கூடாது உண்மையான அன்பு அடுத்தவரை அடுத்தவராக வாழவிடுகிறது.

(பசுமையான உறவுகள் 1996)

82 திருமணத்தில் உடல், உள, உறவு நிபந்தனைகளுக்கு உட்படாமலே ஒருவர் தன்னிறைவடைய முடியும். அவர் முழு மனிதனாகவும் முடியும் எனலாம். இக்கண்ணோட்டத்தில் ஆராய்ந்து தெளிவது மிகவும் அவசியம். ஆகவே முழு மனிதன் யார்? அனைவரோடும் ஒன்றித்து தொடர்புபடுத்தி கொள்ளும் வலிமை மிக்கவரே முழு மனிதன்.

(மனிதா சிந்தி 1993)

83. மனிதன் அன்பு செய்யப் படைக்கப்பட்டிருக்கிறான், நாம் எதிர்பாலரின் உறவுநிலையில் முதிர்ச்சியான வாழ்க்கை வாழவேண்டும். திருமண வாழ்க்கை உறவுகள் மட்டுமின்றி, இருபாலரும் ஆழமான, சகஜமான தூய உள்ளத்தோடு பழகும் நிலையில் உள்ள உறவுகள் மகிழ்ச்சி தருவதாகவும், மனித வாழ்க்கையை வளப்படுத்துவதாகவும் உள்ளன.

(பருவகால நடத்தைகள் 1989)

84. பாலியல் உணர்வு என்பது ஆண் பெண் இருபாலாருக்குமே ஆயுள்வரை இருக்கும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இதை எப்படி, விட்டொழிப்பது என்பதல்ல கேள்வி, தன்னறிவில்லாத் தன்மையை, விழிப்புணர்வில்லாத தன்மையை எப்படி விட்டொழிப்பது என்பதுதான் கேள்வி

85. உறவுகள் ஆழமாவது தனிப்பட்ட அனுபவங்கள் உள்ளத்தை தொடும்போதுதான்.

86. ஆன்மீகத்தையும் உலக வாழ்க்கையையும் தனித்தனியே பிரித்தலாகாது இரண்டும் ஒன்றோடொன்று கலந்தது, நம் அன்றாட வாழ்க்கையில் நாம் காட்டும் பண்புகள் நலன்கள் இவையனைத்தும் நம் ஆன்மீகத்திலிருந்து பரிணாமித்து அடையவேண்டும் இது இல்லையேல் பயன் இல்லை.

(தேவ அழைத்தல் 1988)

87. ஆன்மீகவாழ்வு என்பது எவரும் தம் மனித வாழ்வை மறுத்து வாழ்ந்திடும் இன்னொரு வாழ்வு அன்று, மாறாக மனிதன் மனிதனாக வாழ்வதே ஆன்மீகம். முழு மனிதனாக வளருவதே ஆன்மீகம், அன்றாட வாழ்க்கையின் சூழ்நிலையில் மனிதர் எவ்வாறு வாழ்கின்றாரோ அது சுய ஆன்மீக வாழ்வாக மாறுகிறது.

(சிந்தனைத் தொகுப்புகள் 1994)

88. ஆன்மீக வாழ்வின் உயிர்நாடி உள்ளத் தூய்மையாகும். அது எப்படி உண்டாகிறது? முதலில் நாம் அன்றாடம் சந்திப்பவர்களை இறைவனின் சாயலும் பாவனையுமாக ஆண், பெண் சமத்துவமாக படைக்கப்பட்டவர்கள் என்பதை நினைத்து மதித்து வாழ்வதாகும்.

89. ஒரு வகையில் ஒரு ஆண் ஒரு பெண்ணின் மீது ஆக்கிரமிக்கும் போது அதுதான் அன்பென்று பெண்ணும் எண்ணுகிறாள். ஆனால் அதற்குள் இருக்கும் வழக்கம் வழக்காறு ரீதியாக இருக்கும் அடக்கு

முறையை அவள் சிந்திக்க மறந்து விடுகிறாள். அங்கே அவளை அறியாமலே ஆக்கிரமிப்பு என்பது ஏற்பட்டு விடுகிறது. அழிப்பு என்பது அவளை அறியாமலே ஏற்பட்டுக் கொண்டுருக்கிறது.

(சிந்தனை தொகுப்புகள் 1994)

90. ஊனைச்சார்ந்த முறையில் அல்லது தத்தெடுப்பு சார்ந்த முறையில் இவ்வுலகில் தங்களுக்கு இல்லாத தந்தை, தாய் இழப்பீடாக, கணவனுக்கு இழப்பீடாக அல்லது மாற்றுக் கணவராக / மனைவிக்கு இழப்பீடாக அல்லது மாற்று மனைவியாக பெண் / ஆண் தெய்வங்களை கற்பனை செய்து அவரிடம் அன்புறவு கொள்வது சரியான ஆன்மீகம் அல்ல. உண்மையான பக்தி எனக் கூறமுடியாது.

91. செய்யும் காரியம் எதுவாக இருந்தாலும் அதைத் தன்னலமற்றதாக மாற்றிக்கொள்வதே. பெருமையை விரும்பும் ஒவ்வொரு மனிதனும் பயிலவேண்டிய முதல் மனப்பயிற்சி, ஒரு காலத்தின் தேவைக்கு ஏற்பட்ட மரபுகள் அந்தத்தேவை இல்லாதுபோன காலத்தில் இருப்பதில் நியாயமில்லை.

(சிந்தனைத் தொகுப்புகள் 1994)

92. ஒவ்வொருவரும் கலைஞர். நமது வேலையை தனித்துவத்துடனும் கலை நயத்துடனும் செய்யவேண்டும்.

93. ஒருவர் இயற்கையாகவே அறிவுள்ளவராகவும், உடல் நலம் பெற்றவராகவும் இருக்கலாம், ஆனால் அதே சமயத்தில் ஒருவர் தன்னைத்தானே புனிதப்படுத்திக் கொள்ளவும் வேண்டும். அவர் எந்நிலையிலும் (கற்பு) அன்பு செய்ய சுதந்திரம், (ஏழ்மை) பகிர்ந்துவாழ சுதந்திரம், (கீழ்படிதல்) கூடிச் செயல்படச் சுதந்திரம் உடையவராக வாழவேண்டும்.

(தேவ அழைத்தல் 1988)

94. வாழ்க்கையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நம்மால் என்னசெய்ய முடியுமோ எது நல்லதோ அதைச் செய்ய முயலவேண்டும். நாம் எதைச்செய்ய விரும்புகிறோமோ அதை நம்மனதிலே ஆழமாகவும் கவனமாகவும் பதியவைத்துக்கொண்டு உறுதியாகவும் ஊக்கமாகவும் செயலாற்றினால்தான், நாம் எண்ணும் எண்ணமே, நம்மை நமக்குள் தெரியாமலே ஆக்கிவிடும்.

(சிந்தனைத் துளிகள் 1987)

95. எதையும் காலம் தாழ்த்தாமல் அன்றே செய்கிறவர்கள்தான் செயல்வீரர்கள். வெற்றி என்பது கூடையில் இருக்கும் விதை, அதை மண்ணிலே நட்டு, தண்ணீர் ஊற்றினால்தானே அது பலன் தரும், நாளை, நாளை என்று தள்ளிப்போட்டால் அந்தவிதை பயனற்றதாக ஆகிவிடும் அல்லவா?

96. மனிதர்களை அவர்களின் செயல்களை வழிநடத்துவது கருத்துக்களே நாம் செய்யக் கூடிய எந்த செயலும் நம்முடைய எண்ணங்களாக கருத்துக்களாக உருபெறாமல் செயல் வடிவம் பெறுவதில்லை.

97. சமுதாயம், சமுதாயத்தின் புறப்பார்வையில் பெண்ணின் தனித்தன்மையை மதிக்காமல் எவ்வளவு விழுக்காடு தனிப்பட்ட விதத்தில் பெண்ணுக்கு மதிப்பு கொடுக்கிறதோ, சமுதாயம், சமுதாயத்தின் அகப்பார்வையில் அதே விழுக்காடு தனிப்பட்ட விதத்தில் பெண்ணுக்கு மதிப்பு கொடுப்பதில்லை.

98. ஒருவர் தனக்கும் பிறருக்கும் தீங்கின்றி தன்னை மையமாக வைத்து வாழும்பொழுது ஆளுமை சிறப்புறும். மாறாக பிறரை மையமாக வைத்து வாழின் பிரச்சனைகளும், ஆளுமை சீரழிவும் ஏற்படும்.

99. பொறுப்புணர்வு என்பது (எந்த ஒரு நிகழ்விற்கும்) தன்னிச்சையாக தக்க பதில் கொடுக்கும் திறமை ஆகும்.

100. அறிவு அவசியம்தான் ஆனால் உணர்வும் ரசிப்பும் இல்லாத அறிவு ஜடம்தான்

101. பிள்ளைகளுக்குப் பெற்றோரின் வேதனையும் காயங்களும் தெரிந்திருக்க வேண்டும், இல்லையென்றால் அவர்கள் உணர்வற்ற மரத்துப்போன மனச் சான்றை கொண்டிருப்பர். அவர்களால் பெற்றோருக்கோ, சமுதாயத்திற்கோ, நாட்டிற்கோ ஒரு பயனும்கிடையாது.

102. என்னை எந்த வகையிலும் தொந்தரவு செய்யாத பெற்றோர்களால்தான் எனக்கு மகிழ்ச்சி கிடைத்தது. நான் பாடசாலையில், பள்ளியில் கற்றுக்கொண்டதைவிட வீட்டில் கற்றுக் கொண்டதுதான் அதிகம்.

103. உங்களில் ஒருபகுதியாக ஏற்றுக்கொண்டு அவர்களது வளர்ச்சிக்கு துணையாக இருப்பது தாய்மை உணர்வு ஆண்களும் தாய்மை உணர்வுடன் இருக்க இயங்கமுடியும்.

104. உண்மையான காதலுணர்வுடைய தெய்வீக அம்சம் பொருந்தியவர்கள் மட்டுமே உண்மைக் காதலை இனம்கண்டு இணைத்து வைக்கமுடியும்.

105. ஒரு ஆண் / பெண், ஒரு பெண்ணை /ஆணை மனதார விரும்பி திருமணம் செய்வதாக கூறியபின், வீட்டில் பெற்றோர். பெண்/ஆண் பார்க்கும் பொழுது தன்னை மறந்து பெற்றோரின் ஆலோசனைப்படி செயல்படும் ஆணையோ பெண்ணையோ பெற்றோர்கள் ஆளுமை முதிர்ச்சியடைத்தக்க விதத்தில் வளர்க்கவில்லை என்பதே உண்மை.

106. எப்படி மனிதன் தாய் வயிற்றில் கருவாகி பிறக்கிறானோ அந்த தாய்வழி வந்தவர் என்ற சொல் அவர் இறந்த பிறகும் நிலைத்து நிற்குமோ, அதைப்போலவே காதலிப்பவர்களின் காதலும் நிலைத்து நிற்கும்.

(சிந்தனைத் தொகுப்புகள் 2007)

107. காதலித்துப் பிரிந்தவர்கள் வேறொருவரை வாழ்க்கைத் துணையாக / துணைவராக ஏற்றுக் கொண்டாலும், தன் காதலனுடன் அல்லது காதலியுடன் ஆன காதல் நினைவுகள் என்றும் பசுமையாகவே இருக்கும்.

108. இயல்பான உணர்ச்சிகளை பண்பாடு கட்டுப்படுத்தும்போது மனிதர் மனச்சோர்வுக்கு ஆளாகிறார் அல்லது பண்பாட்டுக்கு மதிப்புக் கொடுப்பது போல் நடித்து, திருட்டுத்தனமான தன்னுடைய உணர்ச்சித் தேவையை பூர்த்தி செய்து கொள்கிறார்.

109. உள்ளத்து உணர்வுகள் மிகவும் அவசியமானவை, உள்ளத்து உணர்வுகள் புளிக் காரம்போல், எண்ணத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எண்ணங்கள் செயல்களாக உருவெடுக்கின்றன. செயல்கள் சமூக மாற்றங்களை கொண்டுவருகின்றன.

110. ஆண் ஆண்மையுடனும், பெண் பெண்மையுடனும் உள்ள சமத்துவம் இன்றியமையாத ஒன்றாகும். உடல் சார்ந்த விதிமுறைகளுக்கு எதிராக சமத்துவம் அடைய முடியாது.

(மனித நடத்தைக் கோலங்கள் 1987)

111. எந்த வகையிலும், எந்த மனிதனும், எந்தப் படைப்புகளுக்கும் குறைந்தவரல்லர்! கருவில் தொடங்கி கல்லறை வரை அவர் கடவுளின் சாயலைத் தாங்கியவர், அவன், அவள் மதிக்கப்படாதபோது கடவுள் மதிக்கப்படுவதில்லை, கடவுள் மதிக்கப்படாதபோது வாழ்வே இல்லை.

112. மகிழ்ச்சி என்பது உனக்குப் பிறர் தருவது அன்று. நீயே கண்டடைவது, உன்அன்றாட வாழ்க்கையில் அனுபவிப்பது. மகிழ்ச்சி சூழ்நிலையிலோ, வளமையிலோ, இல்லை. நம்முள்தான் இருக்கிறது. சூழ்நிலையில் நாம் செயற்படும் விதத்தில்தான் அது அடங்கியுள்ளது.

(இன்ப உறவு மலர 1998)

113. எனது வாழ்க்கையை மகிழ்ச்சியாக அனுபவிக்க முடியவில்லை என்று நான் எண்ணுவேயானால், அது எனது மனத்தினாலும், திடமான அகங்காரத்தினாலும் தான், வாழ்க்கை அற்புதமாக இல்லை என்பதனால் அல்ல.

114. தன்னால் எதவும் செய்ய முடியாது என்று எண்ணுவது தாழ்வுமனப்பான்மை. தன்னால் மட்டுமே எல்லாம் முடியும் என்று எண்ணுவது ஆணவம். தன்னாலும் நிறைவாக வாழமுடியும் என்று அதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வது தன்னம்பிக்கை.

115. எமக்கோ, பிறருக்கோ தீங்கு விளைவிக்காமல் நாம் செய்யும் செயலுக்கு எதிராளி இருப்பின், எதிராளிக்கு மாறாக எண்ணமும் செயலும் கொள்ளாமல் எமது வழியில் இறை நம்பிக்கை, இறைநம்பிக்கையில் ஊன்றிய தன்னம்பிக்கை, நிதானம், அவதானம், விவேகம், வேகம் என்பவற்றை கடைப்பிடித்தால் இறை சித்தமாகிய இலக்கை அடையலாம் என்பதில் ஐயமில்லை.

116. இலக்கை அடைய உண்மையான ஆபத்து, எதிர்மறை எண்ணங்கள், எதிர் மறையான நம்பிக்கைகள்தான். ஒரு கதவு மூடினால் இன்னொரு கதவு திறக்கும் என்று திடமாக நம்புங்கள். பெரிய பிரச்சனையை தீர்க்க நமக்கு சக்தி உண்டு என்றும் நம்புங்கள். சந்தேகப் பேய்க்கு இரையாகி அழியாதீர்கள். நம்பிக்கையை வளர்க்கும்போது எம்மிடம் ஒரு சக்தி விழித்தெழும். இதனால் வாழ்க்கையுடன் ஒத்திசைவு ஏற்படும். அனைத்தும் இறைவன் நடத்தும் செயல் என்ற நம்பிக்கை ஏற்படும்.

117. கொடுமையான நரகம் என்பது, தான் எடுத்த வாழ்க்கையின்மீது, தனக்கு நம்பிக்கை இல்லாமல் வாழ்வது ஆகும்.

118. பெண் எவ்வளவு பெண்மைத்தன்மை பெறமுடியுமோ அவ்வளவு பெண்ணாக வேண்டும். அப்போதுதான் அவள் மலரமுடியும், ஆணும் எவ்வளவு ஆணாக முடியுமோ அவ்வளவு ஆணாக வேண்டும். அப்போதுதான் அவன் மலர முடியும்.

119. தனி மனிதர் தன்னுடைய முழுமையை உணரவேண்டும். அப்போதுதான் வாழ்க்கை அற்புதமாகும். அவரவர் வாழ்கையில் அவரவர் தாமாக மலரவேண்டும் என்பதே என் ஆசை.

120. வாழ்கையில் எல்லா இச்சைகளும் ஆசாபாசங்களும் தீராது, தீரவேண்டியதில்லை. இளமையில் புரிந்தால் சபலங்கள் சபலங்களாகவே இருந்து மறைந்து விடும். இல்லாவிட்டால் சபல- மனச்சபலமாகி வாழ்வைச் சரிவில்கொண்டு செல்லநேரிடும், இது ஆண் பெண் இருபாலருக்கும் பொருந்தும்.

121. எந்த குற்ற உணர்வும் இல்லாமல், நிபந்தனை இல்லாமல் நீதியாக இரு. அடக்கத்துடனும் எளிமையாகவும் உன்னை நீ ஏற்றுக்கொள். உன் வளர்ச்சிக்கு எது உதவும் என்று தேடு, யாருடைய பிரதியாகவோ இல்லாமல், நீயாக சுய அடையாளத்துடன் இரு. உண்மையான சொந்த முகத்துடன் இருப்பதைவிட பேரானந்தம் வேறில்லை.

122. சமுதாயத்தின் அடித்தளம் குடும்பம், குடும்பத்தின் அடித்தளம் அன்பில் மலர்ந்த திருமணச் செயல். (தாம்பத்திய உறவு.)

123. கணவன் மனைவிக்கு, மனைவி கணவனுக்கு கொடுக்க வேண்டிய இடத்தைக் கொடாமல் இருப்பதை எவ்விதத்திலும் ஞாயப்படுத்த முடியாது

124. திருமணம் செய்யும் ஆண் பெண் இருவரும் அவர்களின் ரசனையும் தேவையும் பொருத்தமாக இருப்பின் குடும்பம் மகிழ்ச்சியாக அமையும்.

125. குழந்தை பெற்றுக்கொள்வது மட்டுமே குடும்ப வாழ்க்கை அல்ல. இயற்கை மனிதனுக்கு அளித்திருக்கும் மாபெரும் வரப்பிரசாதம் திருமணச் செயல் (உடலின்பம்). ஆகவே குடும்பத்தவர்கள் உங்கள் அறியாமையினால் அதன் பூரண அனுபவிப்பை இழக்கலாகாது.

126. குடும்ப பிணைப்பும், குடும்பவாழ்வும் எங்கு பலமாக உள்ளனவோ அந்தக் குடும்பத்தில், சமூகத்தில் வாழ்பவர்களுக்கு மனநலப் பிரச்சனைகள் அதிகம் இல்லை.

127. ஒரு செயலை முழுமையாக ஆழமாக செய்யும் போது மனமானது நிகழ்காலத்திலேயே இருக்கும். இது ஒரு அற்புதமான தியான நிலை ஆகும்.

128. உணர்ச்சி அற்றவன் மனிதனல்ல. அவ்வுணர்ச்சிகளை தன்னோடு ஒருங்கமைத்து வாழும்போதுதான் அவன் முழுமனிதன் ஆகின்றான்,

129. நனவற்ற அடிமனதில் புதைக்கப்பட்டவற்றை, நனவு மனத்திற்கு கொண்டுவந்து நனவுமனம் அதைச் சரியாகப் புரிந்து கொண்டு, ஏற்றுக் கொள்வது வரை, மனிதனைப் பாதித்துள்ள உடல், மன, உணர்ச்சிப் பிரச்சனைகள், நோய்கள் தீருவதில்லை. நனவுமனம் காரணத்தை உணர்ந்து அதோடு ஒப்புரவாகும்வரை, இவை தங்களை ஏதாவது ஒரு வழியில் வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கும்.

130. வாழ்க்கையின் அழகு, நான் என்ன செயலைச் செய்கிறேன் என்பதைப் பொறுத்து அமைவதில்லை. செய்கிற காரியத்தில் நான் எந்த அளவுக்கு இதயபூர்வமாக அர்ப்பணித்துக் கொள்கிறேன் என்பதைப் பொறுத்தே அமைகிறது.

131. துறவு நிலையில் இருப்பவர்களைக் கண்டவுடன், நம்முடைய திருமணச்செயல் (தாம்பத்தியம்) அல்லது பாலுணர்வை நாம் எந்த அளவிற்கு இழிவு என்று நினைத்தோமோ, அதே அளவிற்கு நாம் அவர்களை உயர்ந்தவர்களாக நினைத்து பழகுவோம்.

132. கன்னிமை நிலையில் உள்ளவர்கள் மக்களின் சேவைக்கு கன்னிமை நம்மை எப்பொழுதும் தயாராகவைத்திருக்கிறது என உரிமைகோருதல் கூடாது. அவ்வாறு செய்தால் எல்லைமீறிய பாசாங்கு செய்தல்ஆகும்.

(சிந்தனை தொகுப்புகள் 1994)

133. மக்களுடன் இருப்பதில் மகிழ்வுடன், தனியே இருப்பதில் மகிழ்வுடன், உன்னால் இருக்க இயலுமானால், நீ அப்போது நிதான நிலையை எய்துவிட்டாய். உன்னால் தனியாக இருப்பதில் மகிழ்ச்சி அடைய முடியாவிட்டால், யாரோ ஒருவருடன் இருப்பதில்தான் உன்னால் மகிழ்ச்சி அடைய முடியுமென்றால் நீ அப்போது தீவிர உணர்ச்சி நிலையை எய்துவிட்டாய்.

134. உண்மையை அறிய உரிமையுடைய ஒருவரிடம் உண்மையை மறைப்பது பொய் ஆகும். உண்மையை அறிய உரிமையில்லாதவரிடம் உண்மையை மறைப்பது பொய்யாகாது

135. நம்மை முழுமையாக ஏற்று இறைவனால் படைக்கப்பட்ட உலகில் வாழ்க்கை நிலை (துறவறம், திருமணம், திருமணம் செய்யாதவர்) கடமையை செய்கிறபோது எம்மில் உறைந்திருக்கும் இறைத்தன்மை செயல்படும்.

136. இறைவனே உதவுகிறான் என்ற உண்மையை அறிந்தவன் மனிதர்கள் காலில் விழமாட்டார்கள், சுயமரியாதை இழக்க மாட்டார்கள் யாருக்கும் எதற்கும் அஞ்சமாட்டார்.

137. நாம் செய்கிற எந்த ஒரு காரியத்தின் பலனும், நாம் அந்தக் காரியத்தை எந்த மனநிலையோடு செய்கிறோம் என்பதை பொறுத்திருக்கிறது.

138. உடலும் உணர்ச்சியும் அறிவும் ஒருசீராக இணைந்து தூய்மையாகிவிட்டால் வாழ்க்கையில் ஒரு கவர்ச்சி ஏற்படும். தெய்வீக சக்தி பாயும்.

139. ஒரு சொல்லை வேக வேகமாக திரும்ப திரும்ப சொல்ல மனதில் எண்ணங்கள் எழமுடியாது. அவ்வாறு செய்யும் போது சலிப்பை உண்டுபண்ணி வலிய தூக்கத்தை உண்டுபண்ணும். சாதாரண தூக்கம் தரமுடியாத இளைப்பாறுதலை இத்தூக்கம் 10, 15 நிமிடங்களில் தந்துவிடுகிறது. கண் திறந்ததும் புத்துணர்வை உணர்வோம். இது ஆரோக்கியமானது, நன்று ஊக்கமளிப்பது. ஆனால் விழிப்புணர்வை அவை கொண்டு வருவதில்லை. மனதில் எந்த முயற்சியும் எடுப்பதில்லை.

140. நாம் பிறரை மனமாற்ற முயன்றால் எமக்குள் நரகத்தையும் சூழவும் நரகத்தையும் உருவாக்குவோம். மாறாக நாம் மனம் மாறினால் எமக்குள் மோட்சத்தையும் சூழவும் மோட்சத்தையும் உருவாக்குவோம்.

141. நாம் விரும்புவதை பிறருக்குக் கொடுப்பது சுயநலம். மனிதம் மலர மற்றவர்களுக்கு தேவைப்படுவதை அவர்களுக்கு கொடுப்பது பிறர் நலம்.

142. கவலை என்பது எங்களை எப்பொழுதும் வெளியில் ஏதாவது ஒன்றுடன் ஒப்பிட்டுக்கொண்டு, எமக்குள்ளேயே அதைப்பற்றி பேசிக் கொண்டிருப்பதால் நிகழ்வது. இது காலப்போக்கில் எங்கள் மன அமைப்பாகவே மாறிவிடுகிறது.

143. நாம் ஒப்பிட்டு வாழ்ந்தால் அதே விழுக்காடு வீழ்ச்சி அடைவோம். ஒப்பிடுவதற்கான அடிப்படைக் காரணம் மனநிறைவில்லாததே.

144. உடல் தெய்வீகத்தின் கோயில். தெய்வீகம் வகிக்கும் இடம். ஆகவே உடலை ஒரு பொருளைப் போல நடத்தாதே, அது தெய்வீகமானது, புனிதமானது.

145. புலன்களை அடக்கியோ, அல்லது வெறுத்தாலோ, ஆபத்தில் முடியும். மாறாக புலன்களை இயக்குகின்ற சக்தியை கட்டுப்படுத்தவேண்டும், ஒழுங்குபடுத்த வேண்டும்.

146. உரையாடல் இல்லாத வாழ்க்கை, உப்பு இல்லாத சமையல் போன்றது.

147. அளவுக்கதிதமான வேலைகளில் ஈடுபடுவதினால் கல்நெஞ்சக்காரர்களாக மாறும் ஆபத்து அதிகமாய் உள்ளது.

148. ஒருவருக்கு ஒருவர் அளவுக்கு மீறி அன்பு கொண்டு வாழப்படாது. தாமரை இலையில் தண்ணீர் இருப்பது போல செயல்பட்டால் தான் அவரவர் தம் சிகரத்தை அடையமுடியும். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

149. உங்களை விட பலம் குறைந்தவரிடமோ, உங்களை எதிர்க்க முடியாதவரிடமோ, உங்கள் பலத்தைப் பிரயோகிப்பதைவிட அருவருப்பான செயல் வேறு எதுவும் இல்லை.

150. ஒவ்வொரு இளைஞரும் இளைஞியும் சொற்பகாலமாவது (1 வருடம்) தன்னைப் பற்றி ஆழ்ந்து சுய பரிசோதனை செய்ய வேண்டும், எந்த வழியில் சென்றால் முழுமையாக வாழ்க்கையில் மலர முடியும், இயல்பாகவே சக்தி செயல்படும் என்பதை தெரிந்து கொள்ளவேண்டும். இதற்கு வாய்ப்பினை பெற்றோர் அளிக்கவேண்டும்.

151. நமது சொந்த வாழ்க்கைக்கு நாமே பொறுப்பாளர்களாக இருக்கக் கூடாது என்பதற்காக நாம் இறைவனை கூடுதலாக நாடுகிறோம் அல்லது சமய போதகர்களிடம் தஞ்சம் அடைகிறோம். நம்மை விட்டு விட்டு வெளியில் வேறு எங்கோ பொறுப்பினை போடுவதற்கு முயற்சி செய்கிறோம். இறைவனையோ அல்லது மத போதகரையோ ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றால் மது அல்லது போதைப்பொருள் அல்லது தன்னுணர்வு இல்லாமல் செய்கின்ற எதன் மூலமாகவோ நமது பொறுப்பிலிருந்து தப்பியோட முயற்சி செய்கிறோம். இது முட்டாள் தனமானவை. சிறுபிள்ளைத் தனமானவை. பிரச்சனைகளுக்கு தீர்வு அல்ல.

152. இறைவன் எங்கோ வெளியிலோ, மலையிலோ, மடங்களிலோ, ஆலயங்களிளோ காணமுடியாது. உன்னில் உறையும் இறைவன்

வெளிக்கிளம்ப வேண்டும். இறைவன் உனது வளர்ச்சியாக மாறவேண்டும். வெளியில் உள்ள பொருள் அல்ல. அது நீயே. அதாக மாறாத வரை உன்னால் அதைச் சந்திக்கவே முடியாது. அதாக மாறும்போது உன்னால் அதைச் சந்திக்க இயலும்.

153. நாம் நமக்கே தலைவனாயிருக்கவும், மற்றவர்களின் தனித்தன்மையை மதிக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

154. சமுதாயக் கோட்பாடுகளும் சடங்குகளும் மனிதர்களுக்காகவே இருக்கின்றன, அன்றி அவற்றிற்காக நம் வாழ்க்கையைத் திசை திருப்பிக் கொள்ளக்கூடாது.

(சிந்தனைத் துளிகள் 1989)

155. இவை இப்படித்தான் செயல்பட வேண்டும் என்று சமுதாயம் இட்டிருக்கும் நெறிகளுக்காக உண்மையை, நன்மையை, மகிழ்வை நாம் பறிகொடுத்து விடக்கூடாது.

156. தெளிவு பிறக்கவேண்டுமெனில் கேள்வி எழுப்புவது. பரிசோதிப்பது. வேண்டப்படாதவையல்ல, ஐயப்பாடுகளிலும் நேர்மை, உண்மைநாடல் இருப்பின் அதுவே தெளிவு பெறுதலின் அடிப்படைநிலை. உண்மைத் தேடலுக்கும் தேடலின் உண்மைக்கும் வினாக்கள் தடைகள் இல்லை.

157. உண்மை என்றும் தனித்துநிற்க அஞ்சுவதில்லை. உண்மை என்பது பெரும்பான்மையினரின் ஒப்புதலைப் பொறுத்தது அல்ல.

158. இன்னொருவரின் தன்னம்பிக்கையை சார்ந்து கொண்டு தனது சொந்த தன்னம்பிக்கையை சரியவிடும் அபலமான செயல் ஒரு வியாதி. இது மன்னிக்கப்படமுடியாத கொடுமை, மறக்கவேண்டிய தீமை.

159. நிறைவேறாத ஆசை, நிறைவேறமுடியாத தேவை, ஆகியவை மனத்தை அழுத்தும்போது, இயல்பான வாழ்விலிருந்து நிஜத்திலிருந்து மனம் தப்பிக்கும் முயற்சியே, (சாமிவந்ததா, பேய் பிடித்ததா) இந்த இயல்பு.

160. பொதுவாக தன்னம்பிக்கை இல்லாத மனிதர்களிடம்தான் பொறாமைக்குணம் அதிகமாய் இருக்கும்.

161. எப்பொழுது ஒரு ஆண் ஒரு பெண்ணை மதிக்கக் கற்றுக் கொள்ளவில்லையோ, அவன் தன்னைப்பற்றி அறிந்துகொள்ளவும் வாய்ப்பு இல்லை. ஏனெனில் ஆணின் ஒரு பகுதி பெண்மையே. இவ்வாறே பெண்ணும் இருக்கவேண்டும்.

162. மனங்கள் மாறுபட்டது. அது அவரவர் கோணத்திலேயே பெரும்பாலும் சிந்திக்கும் செயல்படும் என்ற உண்மையை ஒத்துக்கொண்டால் பிரச்சனை எளிதாகிவிடும்.

163. அளவுக்கு மீறிய கட்டுப்பாட்டில் ஆண்கள், பெண்கள் வளரும்போது திருமணத்திற்குபின், இயற்கையான திருமணச் செயலை (தாம்பத்திய உறவை) குற்ற உணர்வாக கருத வாய்ப்புள்ளது.

164. ஆளுமை வளர்ச்சி ஒருவரை ஏற்றுக்கொள்ளப்படுதல் பாராட்டப் படுதல், அங்கீகரிக்கப்படுதல் என்பவற்றில் தங்கியுள்ளது.

165. பெண் அவளது புறத்தில் முன்னேற்றம் அடைந்திருக்கிறாள். ஆனால் அகவாழ்வில் முன்னேற்றம் அடைய தடுமாறுகிறாள் என்பதுதான் உண்மை.

166. நன்றியுணர்வு என்பது வெளியிலிருந்து எம்மீது திணிக்கக் கூடிய ஏதோ விதமான நல்லொழுக்கம் அல்ல. உள்ளிருந்து மலர வேண்டிய ஒரு மனோபலம்

167. ஒன்றை நீங்கள் எதிர்பார்த்திருந்தால் ஏமாற்றம், மனச்சலிப்பு வெறுப்பு உருவாகும். எதிர்பார்ப்பு எதுவும் இல்லை என்றால் மனச்சலிப்பு எப்படி வரும்?

168. ஆணை பெண் பின்பற்றினால் அவனது நகல் பிரதியாக மட்டுமே அவள் ஆகிறாள். தன் இயல்பான அடையாளத்தை அவள் இழக்கிறாள்.

169. மற்றவர்கள் உன்மீது சுமத்திய காரியங்களைச் செய்து கொண்டு, உனக்குரிய இயல்பான காரியத்தை செய்யாமல் இருப்பதுதான் தவறு.

170. ஒருவர் பிறமனிதர்கள்மீது கவனம் செலுத்தவேண்டும் பரிவு கொள்ளவேண்டும், அடுத்தவர் தேவைகளை புரிந்துக்கொள்ள வேண்டும். தன்னம்பிக்கை கொண்டிருக்கவேண்டும். தன்னை உள்ள படியே ஏற்றுக்கொள்ள்வேண்டும். அப்பொழுது பால் உணர்வுக் கவர்ச்சி வளர்ச்சியுறும்.

171. நம் செயல்களில் பூரண நம்பிக்கையும் ஈடுபாடும் இல்லாதவர்கள்தான் அடுத்தவர்கள் என்ன நினைப்பார்களோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது.

172. பண்பாட்டின் தொடர்ச்சியில் மட்டுமன்று, அதன் வளர்ச்சியிலும் தாயின் பணிபெரியது, ஏனெனில் சமூக மாற்றங்களின் வித்துக்கள் தூவப் பெறுவது தாயின் மடியில்தான்.

173. ஆண் ஆணின் பாற்றன்மையால் தான் அன்பு செய்ய முடியும் பெண் பெண்ணின் பாற்றன்மையால்தான் அன்பு செய்ய முடியும். ஓர் ஆண் அல்லது பெண் தன்னையோ, பிறரையோ, கடவுளையோ அன்பு செய்யும்போது இந்த இயற்கையின் பாற்றன்மை அங்கு செயல்படும், செயல்படாமல் இருக்க முடியாது.

(மனிதா சிந்தி 1993)

174. நடந்ததை வைத்துக்கொண்டு ஒரு செயலை ஆராய்ந்து பார்க்க வேண்டுமேயொழிய ஒருசெயல் வேறுவிதமாக நடந்திருக்கும் என்று ஆய்வது பொதுவாக பயனற்றது.

175. ஆணாதிக்க சிந்தனையில் பெண் என்பவள் ஆணின் உடமைப் பொருள் என்றாகி மனித ஆசைகளுள் பெண்ணும் ஒரு ஆசைப் பொருள் என்ற எண்ணம் சில எழுத்தாளர்கள், கவிஞர்கள், மதவாதிகள் மனதில் எழுந்தன. பெண் ஓர் ஆசைப்பொருள் அல்ல, மதிக்கப்பட வேண்டியவள்.

(ஆண்,பெண் விழிப்புணர்வு 1991)

மனதில் தோன்றிய எண்ணங்கள் வெளிப்படுத்த, போதிய வாய்ப்பில்லை. அப்படியொரு கலாச்சாரத்தில் நாம் வாழுகின்றோம். இதனால் மனிதர் நலம் குறையும்போது மனிதருக்குப் பலவிதமான நிறைகுறைகள் ஏற்படுகின்றன. மனச்சோர்வு உடல் நோயைப் போலவே குணப்படுத்தக் கூடியது. மனதில் நிம்மதியற்றநிலை திருமணம் செய்ய மனப்பயம், பாலியல் பிரச்சனைகள், குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்கள் மூன்று மாதத்திற்குள் இருவரும் எடுத்த வைத்திய சான்றிதழுடன் உளவியல் உதவிபெற நேரில் சந்தித்து ஆலோசனை பெறலாம். இயற்கை குடும்பக்கட்டுபாடு (டாக்டர் பில்லிங்ஸ் முறை) கடந்த 10 வருடமாக மதம், மொழி, இனம், நாடு. கடந்த சேவை.

எல்லாம் நன்மைக்கே

அ. இராபர்ட்
ஆண் பெண் விழிப்புணர்வு நூல் ஆசிரியர்
2010

| |
|---|
| **சிறந்தவர்கள் - சிந்திக்கிறார்கள்** |
| **சிந்திப்பவர்கள் - சீர்தூக்கிப் பார்க்கிறார்கள்** |
| **சீர்தூக்கிப் பார்ப்பவர்கள் - சரி என்பார்கள்** |

176. யாரோடு இருக்கிறோம், என்ன பதவி வகிக்கிறோம் எந்தெந்தப் பொறுப்புக்கள் நிறைவேற்றுகிறோம் என்பதைப் பொறுத்து நம்முடைய சுயமதிப்பு இல்லை.

177. எல்லாவற்றிற்கும் "ஆமாம்" போடுவது அறியாமை, தைரியமின்மை தேவையற்றவைகளுக்கு இல்லை, என்னால் முடியாது என்று சொல்வது தன்னம்பிக்கை.

178 வேண்டாம், செய்ய மாட்டேன் என்னால் முடியாது அதை வேறு யாரிடமாவது எதிர்பாருங்கள் என்று தன் கொள்கையில் வலுவாக, நேர்மையாக, ஒழுக்கமாக இருப்பதே பிடிவாதம்.

179. பிறர் கண்களுக்கு நன்றாக தெரிய வேண்டும் என்பதற்காக நமது சந்தோஷத்தையே பின்னுக்குத் தள்ளிக் காலால் மிதித்துக் கொண்டிருக்கிறோம்.

180. ஒருவருடைய அடிப்படைத் தன்மைதான் அவருடைய செயல்களில் பிரதிபலிக்கும். அந்த நிலையிலிருந்து அவரை மாற்ற முனைகிறபோது பிரச்சினைகள் எழும்.

181. கடந்தகாலம் நமக்குப் பாடமாக இருக்க வேண்டுமே தவிர பாரமாக இருக்க ஒருபோதும் நாம் அனுமதிக்க கூடாது.

182. உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் உணர்ச்சிகளை குறைத்து விடலாம் என்று நினைக்கிறோம் அதுதான் தவறு.

183. என்ன நடந்தது என்பதை விட, நடந்ததை நாம் எடுத்துக் கொள்ளும் விதம் தான் வாழ்க்கையை பாதிக்கிறது.

184. காதல் இன்றி, மனைவியாக - கணவனாக வெறும் உறவு முறையாக ஒருவரைப் பார்த்து அவருடன் வாழ்வது என்பது சித்திரவதையானது.
சமூகத்திற்கு மட்டுமே ஒரு நபருடன் வாழ்க்கையைத் தொடர வேண்டியிருந்தால் அது நரகம் தான்.
(எனது 20 வயது பராயத்தில் பப்பா கூறினார்)

185. வசீகரம் என்பது அசாதாரண நம்பிக்கையையும், அமைதியும் இருந்தால் மட்டுமே வருவது. உடலுடன் முழுவதுமாக இயல்புடன் இருக்கும் பொழுது வருவது.

186. நாம் அமைதியாக இல்லாத பொழுது மட்டுமே, மற்றவர்களுடைய அமைதியை கெடுப்பபோம்.

187. கோபத்திலேயே ஒருவருடைய உண்மையான சொருபத்தை அடையாளம் காட்ட முடியும்.
மகிழ்ச்சியில் நம் செயல்பாடுகள் மேம்பூச்சு

188. உங்களுடைய பலவீனத்தை மற்றவர்களிடம் வெளிப்படுத்தி உங்களை மற்றவர் ஆதிக்கம் செலுத்த நீங்கள் அனுமதித்து விட்டால், மனவியல்பு சிக்கல்களால் நீங்கள் அவதிப்படுகிறீர்கள் என்று அர்த்தம்.

189. நாம் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ நமக்கு உந்து சக்தியாக இருக்கும் மற்றொரு காரணி நம் வாழ்க்கையை நம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் திறமை.


190. அன்பும் பாசமும் கலந்து செயல்படும் எந்த ஒரு செயல்பாடும் இனிமையாக அமையும்.

Cell : 0757602025

யாழ்ப்பாணம்
2012

## ஆசிரியரின் பிற வெளியீடுகள்:

1. மனித நடத்தைக் கோலங்கள் (உளவியல் வெளியீடு 1987)
2. தேவ அழைத்தல் (1988)
3. மாதகல் கத்தோலிக்க ஆலயங்களின் வரலாறு (1989)
4. சிந்தனைத் துளிகள் (3-ம் பதிப்பு 1991)
5. பருவகால நடத்தைகள் (உளவியல் வெளியீடு 1989)
5. சிந்தனை அலைகள் (1990)
7. ஆண், பெண் விழிப்புணர்வு (உளவியல் வெளியீடு 1991)
8. பெண்களின் விடுதலை நற்செய்தி (இறையியல், உளவியல் வெளியீடு 1992)
9. மனிதா சிந்தி (1993)
10. சிந்தனைத் தொகுப்புகள் I (1994)
11. சிப்பிக்குள் முத்து (1995)
12. பசுமையான உறவுகள் (1996)
13. சிந்தனைத் தொகுப்புகள் II (1997)
    III (2007)
14. இன்ப உறவு மலர (1998)



அச்சிடோர்:

ஸ்ரீ லக்ஷ்மி கம்ப்யூட்டர் ஆப்செட் பிரஸ்,
நெ.19D4, காந்தி ரோடு, வந்தவாசி.
தொலைபேசி: 225393